**செய்தி வெளியீடு எண்: 758** **நாள்:15.12.2012**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று **(15.12.2012)** சென்னை, சென்ட்ரல் ரயில் நிலையத்தில் சென்னை – மதுரை மற்றும் சென்னை – திருவனந்தபுரம் இடையே செல்லும் ஏ.சி. துரந்தோ அதிவேக விரைவு ரயில்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

சென்னை – மதுரை இடையே எங்கும் நிற்காமல் செல்லும் துரந்தோ அதிவேக விரைவு ரயில் வாரம் இருமுறை அதாவது திங்கள் மற்றும் புதன்கிழமை தோறும் சென்னை சென்ட்ரலிருந்து இரவு **10.30** மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை **7** மணியளவில் மதுரை சென்றடையும். அதேபோல், சென்னை – திருவனந்தபுரம் இடையே எங்கும் நிற்காமல் செல்லும் துரந்தோ அதிவேக விரைவு ரயில் வாரம் இருமுறை அதாவது செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமை தோறும் சென்னை சென்ட்ரலிருந்து மாலை **4.30** மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை **5.15** மணியளவில் திருவனந்தபுரம் சென்றடையும்.

இந்த இரு துரந்தோ அதிவேக விரைவு ரயில்களின் அனைத்து பெட்டிகளும் குளிர்சாதன வசதி செய்யப்பட்டது. மேலும் இந்த ரயில்கள் மணிக்கு **110** கி.மீ. வேகம் செல்லும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் சென்னை, சென்ட்ரல் ரயில் நிலையத்தில் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்ட சென்னை – மதுரை மற்றும் சென்னை – திருவனந்தபுரம் இடையே செல்லும் ஏ.சி. துரந்தோ அதிவேக விரைவு ரயில்களால் தென்தமிழக மக்கள் பெருமளவில் பயனடையும் வகையில் அவர்களின் பயண நேரம் வெகுவாக குறையும்.

இந்த விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தெற்கு ரயில்வே பொது மேலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 15.12.2012